ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1968/10 - 2016 මැයි මස 25 වැනි බදාදා - 2016.05.25

*1968/10 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டம்**

*அமுல்படுத்தும் தரங்கள் : விமானியற்ற விமானங்கள் (மனிதர்கள் அற்ற விமானப் போக்குவரத்து தொலைக்கட்டுப்பாட்டு விமானங்கள்) செயற்படுத்துவதற்கான தேவைகள்*

*சிவில் விமான சேவை அதிகார சபைப் பணிப்பாளர் நாயகம் எச்.எம்.சீ. நிமல்சிறி ஆகிய நான், 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைச் சட்டத்தின் 120(1) ஆம் பிரிவுக்கமைய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய கீழ்க்குறிப்பிடப்பட்ட அமுல்படுத்தும் தரங்ளை வெளியிடுகிறேன்.*

*எச். எம். சீ. நிமல்சிறி,*
*சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம்,*
*மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.*

*இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை,*
*இல. 04, ஹுணுப்பிட்டிய வீதி ,*
*கொழும்பு 02,*
*இலங்கை.*

**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை**

*அமுல்படுத்தும் சட்டங்கள்*

*(2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 120 வது வாசகத்தின் கீழ் வெளியிடப்பட்டது)*

விமானியற்ற விமானங்கள் (மனிதர்கள் அற்ற விமானப் போக்குவரத்து தொலைக்கட்டுப்பாட்டு விமானங்கள்) செயற்படுத்துவதற்கான தேவைகள்.

**இணைப்பு இலக்கம்** : CA-IS-*2016*-GEN-*001* **SLCAIS** : *53* **திகதி** : *2016*, பெப்புருவரி *25*

இதற்குப் பின்னர் சிவில் விமான சேவைச் சட்டம் எனக் கருதப்படுவது 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 120 ஆவது பிரிவிற்கமைய சிவில் விமான சேவை சட்டத்தின் உப வாசகத்தில் உரிய சர்வதேச விமான சேவை இணக்கப்பாட்டின் பிரமாணக் குறிப்பு உட்பட சிவில் விமான சேவைச் சட்டத்தின் ஒழுங்கு விதிமுறைகள் அல்லது அச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட கோவைகள் அல்லது ஒழுங்கு விதிமுறைகளை அமுல்படுத்தும் பணிகளுக்காக அமுல்படுத்தும் தரங்கள் எதனையும் வெளியிடுவதற்காக அவசியப்படும் அல்லது பொருத்தமான அல்லது கருதக்கூடிய சந்தர்ப்பத்தில் அவ்வாறு அமுல்படுத்தும் தரங்கள் எதனையும் வெளியிடும் அதிகாரம் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியதாகும்.

இதற்கமைய சிவில் விமான சேவை பணிப்பாளர் நாயகமான நான், இத்துடன் உள்ள இணைப்பின் (இணைப்பு இலக்கம் CA-IS-2016-GEN-001 - இணைப்பு - 01) இல் குறிப்பிடப்பட்டுள்ள "விமானியற்ற விமானம்" (ஆளில்லா விமானப் போக்குவரத்து / தொலைக்கட்டுப்பாட்டு விமானம்) செயற்படுத்துவதற்கான தேவை குறித்து தலைப்பின் கீழ் சிவில் விமான சேவை சட்டத்தின் 80 ஆவது வாசகத்தின் கீழ் அல்லது அவ் உப ஆவணத்தின் 08 ஆம் பிரிவின் கீழ் உள்ள இணக்கப்பாட்டின் 02 ஆவது இணைப்பின் 04 ஆவது வாசகத்தில் உரியவாறு சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளின் கீழ் விமானியற்ற விமானங்களைச் செயற்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய அமுல்படுத்தும் தரங்களை இத்தால் வெளியிடுகிறேன்.

அமுல்படுத்தும் தரங்களுக்கமைய செயற்படாது இருப்பது குற்றம் என குறிப்பிடப்பட்டுள்ள சிவில் விமான சேவைச் சட்டத்தின் 103 வது பிரிவின் மீது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

எச். எம். சீ. நிமல்சிறி,
சிவில் விமானப் சேவை பணிப்பாளர் நாயகம்
மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்.

இலங்கை சிவில் விமானப் சேவை அதிகாரசபை,
இல. 04, ஹுணுப்பிட்டிய வீதி ,
கொழும்பு 02,
இலங்கை.

இணைப்பு இலக்கம் CA-IS-2016- GEN-001 - இணைப்பு – 01

**அமுல்படுத்தும் தர இலக்கம் SLCAIS - 053**

விமானியற்ற விமானம் (ஆளில்லா விமானங்கள் தொலைக்கட்டுப்பாட்டு விமானங்கள்) செயற்படுத்துவதற்கான தேவைகள்

**1. உள்ளடக்கம்**

இவ் அமுல்படுத்தும் தரத்தில் பணிக்கப்பட்ட தேவைகள் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 80 ஆவது பிரிவு மற்றும் அவ் உப ஆவணத்தின் 08 ஆவது பிரிவின் கீழ் இலங்கையில் வான் பரப்பிற்குள் இதற்குப் பின்னர் "ஆளில்லா விமானம்" என அறிமுகப்படுத்தப்படும் தொலைக்கட்டுப்பாட்டு விமானம் கட்டுப்பாட்டு நூல் கொண்ட மாதிரி விமானம் சுயமாகப் பயணிக்கும் மாதிரி விமானமாக அல்லது றோனர் செயற்பாடுகள் தொடர்பில் உரியதாக இருக்க வேண்டும்.

**2. அங்கீகரிக்கப்பட்ட நபர் அல்லது ஒழுங்கமைப்புக்கள்**

(அ) சிவில் விமான சேவை பணிப்பாளர் நாயகத்திற்காக மற்றும் அவருக்காக கீழ்க்குறிப்பிட்ட பணிகளில் ஒன்று அல்லது அதனை விட மேற்பட்ட அளவு மேற்கொள்வதற்காக ஆளில்லா விமானச் செயற்பாட்டுத் திட்டங்கள், செயற்பாடுகள் தொடர்பில் பொருத்தமான நிபுணத்துவம் கொண்ட அல்லது விமானப் போக்குவரத்து விபரங்கள் மற்றும் எல்லைகள் தொடர்பில் போதியளவு அறிவு கொண்ட ஒருவர் அல்லது அமைப்பு சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு இதற்கு பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட நபர் அல்லது அங்கீககரிக்கப்பட்ட அமைப்பாக அங்கீகரிக்க சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு முடியும்.

(i) ஆளில்லா விமானத்தைச் செயற்படுத்துவதற்காக விமானியின் தகைமைகளை வெளியிடல் அல்லது ;

(ii) ஆளில்லா விமானச் செயற்பாட்டாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கான நபர்களை நியமித்தல் அல்லது ;

(iii) ஆளில்லா விமானச் செயற்பாடுகள் தொடர்பில் நோட்டம் வெளியிடுவதற்காக விமான தகவல் சேவை வழங்குநருக்குத் தேவையான தகவல்களை அறிவிப்பதற்காக ஒருவருக்கு அதிகாரத்தை வழங்குதல் அல்லது ;

(iv) ஆளில்லா விமானத்தை அமைத்தல் அல்லது மாற்றியமைப்பதற்காக அதிகாரத்தை வழங்குதல் அல்லது;

(v) ஆளில்லா விமானத்தை அமைப்பதற்கான பரிசோதனைகளை மேற்கொள்ளல் மற்றும் அங்கீகரித்தல் ;

(vi) தொலைக்கட்டுப்பாட்டு விமானச் செயற்படுத்தலுக்காக அதிகாரத்தை வழங்குதல்.

(ஆ) மேற்கூறப்பட்ட ஒழுங்கு விதிகள் எதனையும் கருத்தில் கொள்ளாது ஆளில்லா விமானத்தை செயற்படுத்துவற்கான அங்கீகாரத்தைக் கோரி அவருக்கு நேரடியாக விண்ணப்பம் சமர்ப்பிக்கும் நபருக்கு அல்லது அமைப்பிற்கு அதற்காக அனுமதி வழங்க சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு முடியும் ;

(இ) இவ் அமுல்படுத்தும் தரங்களின் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட நபர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு அல்லது நிலைமைகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் நபருக்கு அல்லது அமைப்பிற்கு அதற்காக ஆளில்லா விமானங்களை தாபிக்க /செயற்படுத்த பராமரிப்பு தொடர்பில் அவருக்குள்ள தகைமை மற்றும் அனுபவத்தினைக் குறிப்பிட்டு சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலக் கோரிக்கையினைச் சமர்ப்பிக்க முடியும்.

**3. ஆளில்லா விமானத்தைச் செயற்படுத்துவதற்கான செயற்பாட்டு எல்லைகள்**

(அ) கீழ் குறிப்பிட்ட தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் மாத்திரம் உரிய 25 கிலோ கிராமை விடக் கூடிய ஆளில்லா விமானத்தைச் செயற்படுத்தக்கூடாது.

(i) அதற்காக சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் உரிய அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல் ;

(ii) விமானங்களைச் செலுத்தவதற்குரியதாக வெளியிடப்பட்டுள்ள தனிநபர் அனுமதிப் பத்திரம், விமானச் செயற்பாடுகள் மற்றும் விமானத் தேவைகள் தொடர்பில் சகலவற்றையும் பூரணப்படுத்தல்.

(ஆ) இவ் அமுல்படுத்தும் தரங்களை உரிய தேவைகளுக்கு அமைய நடாத்துவதற்குட்பட்டு ஒரு கிலோ கிராம் மற்றும் 25 கிலோ கிராமிற்கு இடைப்பட்ட ஆளில்லா விமானம்

(i) சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஒருவர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு அல்லது அதிகாரத்தின் கீழ் திட்டமிடல், உருவாக்கல், அல்லது பராமரிக்கக்கூடிய ; அத்துடன்

(ii) சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு அல்லது அதிகாரத்தின் கீழ் செயற்படுத்த முடியும்.

(இ) ஒரு கிலோ கிராமை விடக் குறைந்த ஆளில்லா விமானம் உரிய சொத்து உரிமையாளரின் அங்கீகாரத்துடன் தனிப்பட்ட நிலப்பரப்பில் அல்லது அதற்காக தெளிவாக இனங்காணப்பட்ட பொது இடத்தில் அல்லது நபரின் சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பில் உரிய கவனத்துடன் களியாட்ட அல்லது கல்விப் பணிகளுக்காகச் செயற்படுத்துவதாயின் சிவில் விமான சேவைப் பணிப்பாளரின் அங்கீகாரம் இன்றி அவ்வாறு செயற்படுத்த முடியும்.

**4. விமான செயற்பாடுகள்**

கீழ்க்குறிப்பிடப்பட்ட சந்தர்பங்களைத் தவிர இங்கு 2 (அ) மற்றும் 2 (ஆ) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வகையின் ஆளில்லா விமானம் அவ் விமானம் செயற்படுத்தும் பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதேச பொலிசாரிடமிருந்து பெற்றுக் கொண்ட விமானச் செயற்பாடுகள் கொண்ட எந்தவொரு பிரதேசத்திற்கு மேலால் திறந்த வான் பரப்பில் செயற்படுத்தக்கூடாது.

(அ) ஆளில்லா விமானம் அங்கீகரிக்கப்பட்ட விமான நிலையத்தில் செயற்படுத்தல் ;

(ஆ) ஆளில்லா விமானம் சிவில் விமான சேவை அதிகார சபையினால் அதிகாரம் வழங்கும் நபருக்கு முன்னால் செயற்படுத்தல் ;

(இ) ஆளில்லா விமானம் அவ் விமான உரிமையாளருக்குரிய வளாகத்திற்கு வெளியே செல்லக்கூடியவாறு செயற்படுத்தல்.

**5. அறிமுகப்படுத்தும் பாதிப்புக்கள்**

(அ) இங்கு 2 (அ) மற்றும் 2 (ஆ) வாசகங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையின் விமானியற்ற விமானம், சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் அல்லது அவரினால் உரியவாறு அதிகாரம் வழங்கப்பட்ட நபரினால் அல்லது அமைப்பாளரினால் அல்லது வழங்கப்பட்ட இனங்காணும் பதிப்பு கொண்ட நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் செயற்படுத்தக்கூடாது ;

(ஆ) ஆளில்லா விமானம் காட்சிப்படுத்தலை இனங்காணும் பாதிப்புக்கள், அதன் இனங்காணும் இணக்கம், உரிமையாளர் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் அவருடன் தொடர்புபடக் கூடியவாறான விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

**6. வர்த்தகப் பணிகளுக்கு ஆளில்லா விமானங்களைச் செயற்படுத்தல்**

உரிய கட்டணத்தை செலுத்தி சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் ஒவ்வொன்றுக்கான சந்தர்ப்பங்களுக்காக தனியாக பெற்றுக் கொள்ள வேண்டிய விசேட எழுத்து மூல அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது எந்த வகையான ஆளில்லா விமானங்களையும் வாடகை அல்லது வேறு பயனைப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

**7. விமானச் செயற்பாட்டுப் பணிகளுக்காக ஆளில்லா விமானங்களைச் செயற்படுத்தல்**

உரிய கட்டணத்தைச் செலுத்தி விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய விசேட எழுத்து மூல அங்கீகாரத்தைப் பெறாது எவ்வகையான ஆளில்லா விமானங்களையும் எக்காரணம் கொண்டும் ஏற்றுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளக்கூடாது.

**8. கட்டுப்பாட்டு நூல் கொண்ட மாதிரி விமானங்கள்**

கட்டுப்பாட்டு நூல் கொண்ட மாதிரி விமானங்கள் 30 மீற்றரை விட நீளமான நூல் அல்லது கூடுதலான நூல்கள் கொண்டதாக செயற்படுத்தக்கூடாது.

**9. தொலைக் கட்டுப்பாட்டுக் கருவி கொண்ட விமானங்களைப் பாதுகாப்புடன் செயற்படுத்தல்**

நபர் அல்லது சொத்துக்களுக்கு விபத்துக்கள் ஏற்படாதவாறு பாதுகாப்பான முறையில் செயற்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக விமான வகையின் பொதுவான செயற்பாடுகளுக்காக விமானத்தின் முறைகளை அதிகார வகைகள் மற்றும் நிர்வாக வியூகங்களைச் செயற்படுத்தல் மற்றும் சரி பிழையினைப் பார்த்ததன் பின்னர் எதுவித வகைகளிலும் அடங்காத விமானியற்ற விமானங்கள் செயற்படுத்தக்கூடாது

**10. விமானியற்ற விமானச் செயற்பாட்டாளர்களின் நிலைமைகள்**

எந்தவொரு நபரும்,

(அ) விமானங்களின் பாதுகாப்பான செயற்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அறிவு அவரிடம் இன்மை ;

(ஆ) சிறந்த உடல் உள சுகாதார நிலைமை இன்றிக் காணப்படல் ;

(இ) போதைப் பொருட்கள் (மனோவியல் செயற்பாட்டுப் பொருட்கள்) பயன்படுத்திப் போதையில் இருத்தல் ;

(ஈ) சமூகப் பொறுப்புக்கள் தொடர்பாக நிலையான உணர்வுகள் இன்றி காணப்படல்;

அவர் ஆளில்லா விமானங்களைச் செயற்படுத்தக்கூடாது.

**11. செயற்பாட்டு இடங்கள்**

(அ) அவ்வதற்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்படுத்துவதாயின் கீழ் குறிப்பிடப்பட்ட விமானங்களின் எல்லையிலிருந்து 5 மைல் அல்லது அதற்குட்பட்டு விமானி அல்லாத விமானங்களை செயற்படுத்தக்கூடாது.

(i) **பிரயாண நிர்வாகம் மற்றும் விமான நிலையம்**

(1) சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துடன் மற்றும் விமானச் செயற்பாட்டாளருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கமைய செயற்பாடுகள் மேற்கொள்வதாயின் மற்றும் ;

(2) சுதந்திர மாதிரி விமானங்கள் தொடர்பில் செயற்பாட்டு விமான ஓடு பாதைக்கு காற்று கீழ் மட்டத்தில் (downwind) விமானத்தைச் செயற்படுத்துவதாக இருப்பின் மற்றும் ;

(3) தொலைக்கட்டுப்பாட்டு நிர்வாகம் தொடர்பிலான செயற்பாடுகள்.

* விமானத்தைச் செலுத்தும் வேளையில் அவ்வவ் விமானியுடன் மேற்பார்வையாளர் வீதம் இருப்பின் ;

* சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் வேறு முறையில் அங்கீகரிக்கப்பட்டிருப்பின் நில மட்டத்திலிருந்து 400 அடியை விட உயர்ந்த விமானங்களை ஏற்படுத்துவதாயின் மற்றும்

(ii) விமானப் போக்குவரத்து நிர்வாகம் கொண்ட கேந்திர நிலையம் உரிய விமானக் கட்டுப்பாட்டுப் பிரிவு சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அதிகாரத்தை வழங்குவதற்கமைய புதிய விமானத்தைச் செயற்படுத்துவதாயின் மாத்திரம் ;

(iii) எந்தவொரு விமான நிலையம் - செயற்படுத்தும் நபர் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அதற்கான முன் அங்கீகாரத்தைப் பெற்றிருப்பின் மற்றும்

(1) அந்நபர் அங்கீகரிக்கப்பட்ட நபரினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் வெளியிடப்பட்ட முன்னோடித் தகைமை வகிப்பதாயின் அல்லது அவ்வாறான முன்னோடித் தகைமை வகிப்பவரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்படுவதாயின் ;

(2) அவர் அங்கீகரிக்கப்பட்ட நபரினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் அல்லது தொலைக்கட்டுப்பாட்டு விமானச் செயற்பாடுகள் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நபரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்படுவதாயின் ;

(3) அவர் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயத்தினால் வெளியிடப்பட்ட விமானி அனுமதிப்பத்திரம் அல்லது சான்றிதழ் கொண்டவராயின்.

(ஆ) சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் வேறு மொழியில் அன்றி எழுத்து மூல அங்கீகாரத்தை வழங்கியிருப்பின் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் வேறுபட்ட இடத்தில் விமானியற்ற விமானங்கள் செயற்படுத்தக்கூடாது.

(i) விமான நிலையங்கள் அசையும் இடங்களில் அல்லது அதற்கு மேற்பரப்பில் அல்லது ;

(ii) ஏதேனும் செயற்பாட்டு ஓடுபாதை கொண்ட பிரதேசத்தின் மீது அல்லது அதனை விட மேலால் அல்லது ;

(iii) ஆட்கள் ஒன்றுகூடும் இடங்கள் அல்லது பகிரங்க கூட்டங்களுக்கு மேலால் அல்லது ;

(iv) சன நெரிசல் கொண்ட பிரதேசங்களுக்கு மேலால் அல்லது ;

(v) நெடுஞ்சாலை அல்லது புகையிர வீதிக்கு நேராக அல்லது மேலால் ;

(vi) திறந்த மின் கம்ப மார்க்கத்திற்கு மேலால் அல்லது அதற்கு கீழால் அல்லது ;

(vii) தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கு அருகாமையில் அல்லது ;

(viii) அனுமதியின்றி தேசிய வன சரணாலயம், பாதுகாப்பு பிரதேசம் அல்லது பாதுகாப்பு நிறுவனத்திற்கு.

(இ) விமான நிலையத்தின் எல்லைக்கு வெளியே மற்றும்

(i) விமானச் செயற்பாட்டினை நிறுத்துவதற்கான இயலுமை கொண்ட தடைகளுக்கு பௌதீக ரீதியில் விமான நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள விமானச் சந்தர்ப்பங்கள் ;

மேற்கொள்ளப்படும் தளுவக்கூடிய செயற்பாடுகளுக்கு 10 (அ) வாசகத்திற்கு உரியதல்லாத

(ஈ) புதிய விமானம் 100 அடியை விட மேற்பட்ட உயரத்தில் செல்லாதிருப்பின் இங்கு மேற்கூறப்பட்ட 10(அ) மற்றும் (இ) சுயாதீன விமான மாதிரிச் செயற்பாடுகள் தொடர்பில் உரியதல்லாதவைகள்.

**12. விமான பரப்பு**

(அ) விமானியற்ற விமானம்

(i) எவையேனும் சொத்தில் வசிப்பவர் அல்லது அச்சொத்தின் உரிமையாளரினால் வழங்கப்பட்ட முன் அறிவித்தலைப் பெற்றிருந்தால் அன்றி அச்சொத்துக்கு மேலாக பயணிப்பது மற்றும்

(ii) மூன்றாம் தரப்பினருக்கு அல்லது சொத்தின் பாதுகாப்பிற்குப் பாதிப்புக்கள் ஏற்படாதவாறு மற்றும்

(iii) விமானத்தை செயற்படுத்தும் விமானப் பரப்பை விட மாற்றமடையும் விமானங்கள் தொடர்பில் மேற்பார்வையினை மேற்கொள்ளாது மற்றும்

(iv) 11 (இ) வாசகத்திற்கமைவாக அன்றி நில மட்டத்திலிருந்து 400 அடியை விட மேற்பட்ட எந்தவொரு உயர்ந்த இடத்திலிருந்தும்

**செயற்பாடுகள் மேற்கொள்ளக்கூடாத விடயங்கள்**

(ஆ) சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பின் அல்லது அதிகாரியின் அதிகாரத்தின் கீழ் விமானத்தைச் செயற்படுத்துவதாயின் 10(அ) (a) வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் எதுவும் இதற்குரியதன்று;

(இ) கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு செயற்படுத்துவதாயின் விமானியற்ற விமானங்கள் விமான நிலைய எல்லையிலிருந்து 5 மீற்றருக்கு மேற்பட்ட தூரம் மற்றும் நில மட்டத்திலிருந்து 400 அடியை விட உயர்ந்த இடத்திருலிருந்து செயற்படுத்த முடியும்.

(i) இப்பணிகளுக்காக பெயரிடப்பட்டுள்ள விபத்து செயற்பாடுகள் மேற்கொள்வதாயின் அல்லது ;

(ii) உரிய செயற்பாடுகள் C, D மற்றும் E பிரிவின் விமானப் பரப்பிற்கு முழுமையாக புறம்பாக மேற்கொள்வதாயின் குறைந்தபட்ச செயற்பாடுகளுக்கு 24 மணித்தியலாத்திற்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட நபரினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் அதிகாரம் வழங்கப்பட்ட நபர் நோட்டாம் (NOTAM) வழங்குவதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட தகவல்களளை விமான தகவல் சேவை வழங்குநருக்கு அறிவிப்பதாயின்

(a) செயற்பாட்டாளரின் பெயர் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் ;

(b) உரிய செயற்பாடுகள் இடம்பெறும் இடம் ;

(c) உத்தேச செயற்பாட்டுத் திகதி நேரம் மற்றும் காணப்படும் காலம் ;

(d) விமானச் செயற்பாடுகளுக்காக உத்தேச நில மட்டத்திலிருந்து உயர்ந்த பட்ச உயரம்.

**13. வீதி உரிமை**

(அ) விமானியற்ற விமானத்தைச் செயற்படுத்தும் நபர் தாம் செயற்படுத்தும் விமானம் சகல சந்தர்ப்பங்களிலும் நிலத்திலுள்ள மற்றும் பயணிக்கக்கூடிய சகல ஆட்கள் கொண்ட விமானங்களுக்கு வீதி ஒழுங்கு வழங்கப்படுவதுடன் அவ் விமானங்களிலிருந்து தொலைவில் தாபிக்கப்படுவதாகவும் உறுதிப்படுத்த வேண்டும் ;

(ஆ) சுதந்திர விமான மாதிரி விமானத்தைச் செயற்படுத்தும் நபர் விமானத்தை செயற்படுத்துவதற்கு முன்னர் எதிர்பாாக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு இடையே அவ் விமானம் சகல சந்தர்ப்பங்களிலும் நில மட்டம் மற்றும் செயற்படுத்தும் சகல ஆட்கள் கொண்ட விமானங்களின் தொலைவில் காணப்படுவதாக உறுதிப்படுத்த வேண்டும் ;

(இ) விமானியற்ற விமானங்களைச் செயற்படுத்தும் நபர் தாம் செயற்படுத்தும் விமானம் நிலத்தில் அல்லது நீரில் அல்லது மேற்கொள்ளக்கூடிய சகல அசைவுகளுக்கும் திசையினை வழங்கி தொலைவிலிருந்து செயற்படுத்துவதாக உறுதிப்படுத்த வேண்டும் ;

(ஈ) விமானியற்ற விமானங்களைச் செயற்படுத்தும் நபர் தாம் செயற்படுத்தும் விமானம் உரிய நபரின் கால்நடைகள், பறவைகள் மற்றும் சொத்துக்களிலிருந்து தொலைவில் இருப்பதாக உறுதிப்படுத்த வேண்டும்.

**14. பதார்த்தங்கள் விழுதல் மற்றும் கண்காட்சிகளை மேற்கொள்ளல்**

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் பெற்றுக் கொண்ட அங்கீகாரம் இன்றி செலுத்தப்படும் விமானியற்ற விமானங்களிலிருந்து ஏதேனும் பதார்த்தம் கீழே விழுதல் அல்லது அவ் விமானத்தின் எந்தவொரு பாகத்தையும் காட்சிப்படுத்தவோ கூடாது.

**15. இழுத்துக் கொண்டு செல்லல்**

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் பெற்றுக் கொண்ட உரிய அங்கீகாரம் அற்ற விமானியற்ற விமானங்கள் எதனையும் இழுத்துச் செல்ல (Towing) கூடாது.

**16. கற்புல வரைபுச் செயற்பாடுகள்**

(அ) கீழ்க் குறிப்பிட்ட இடங்களில் மற்றும் நிலைமைகளில் விமானியற்ற விமானங்களைச் செயற்படுத்தக் கூடாது.

(i) விமானம் செயற்படுத்தப்படும் வேளையில் அதன் பரப்பில் செயற்படுத்தும் நபருக்கு காணாதவாறு அக்காட்சிகள் தடைப்பட்டுள்ள ஏதேனும் பிரசேத்திற்கு மேலால் ;

(ii) மேலே தூக்கப்பட்ட ஏதேனும் ஒரு இடத்தில், கட்டடத்தில் அல்லது பொருளில் இருந்து ;

(iii) விமானத்தின் கற்புலன் வரைபடத்தை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு செயற்பாடுகளில் ஈடுபடும் நபருக்கு உள்ள இயலுமைகளுக்குத் தடைகள் ஏற்படுத்தக்கூடிய காலநிலை ஆய்வுகள் .

(ஆ) விமானியற்ற விமானங்களைச் செயற்படுத்தும் நபர் சகல சந்தர்ப்பங்களிலும்

(i) விமானத்துடன் கற்புலனாகும் வரைபடத்தைப் பேண வேண்டும் ;

(ii) அவருக்கு விமானத்தைச் செயற்படுத்த குறைந்தபட்ச விமானப் பரப்பைக் காணும் இயலுமை இருக்க வேண்டும் ;

(iii) விமானத்தை மேகங்களுக்கு கீழால் நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(இ) இவ் அமுல்படுத்தும் தரங்களின் பணிகளுக்காக கற்புலனாகும் வரைபுகள் எனக்கருத்தப்படுவது மேற்பார்வையாளருக்கு அவ்வரைபடம் ஊடாக தெளிவான காட்சியினைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நேரடி வரைபு காணப்படுவதுடன் இக் கற்புலனாகும் வரைபு கீழ்க் குறிப்பிட்ட உதவிகளைப் பயன்படுத்துவதன் மூலமும் பெற்றுக் கொள்ள முடியும்.

(i) இலத்திரனியல், இயந்திரம், இலத்திரணியல் கோள்கள், கற்புலன் மற்றும் இலத்திரணியல் கற்புலன் உபகரணங்கள் தவிர மூக்குக்கண்ணாடி, கண்வில்லை பயன்படுத்துவதாயின் துணை விரிவான பார்வையினை அதிகரிக்காத அளவு வரை திருத்தியமைப்பதற்காக பயன்படுத்தக்கூடிய சமமான வியூகங்கள் அல்லது

(ii) முதலாவது நபர் காட்சி முறைகள் மற்றும்

(a) விமானத்தின் கற்புலன் வரைபு மற்றும் ;

(b) விமானத்தை செயற்படுத்தும் அண்மித்த விமானப் பரப்பின் காட்சி மற்றும் ;

(c) விமானத்தைச் செயற்படுத்தும் நபருடன் நேரடி தொடர்புகள் ;

பேணுதல் ஆகிய பயிற்றப்பட்ட இயலுமை கொண்ட மேற்பார்வையாளர்.

**17. இரவு நேரச் செயற்பாடுகள்**

கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு மேற்கொள்ளப்படும் செயற்பாட்டை தவிர இருளடைந்த சந்தர்ப்பம் தொடக்கம் வெளிச்சம் தென்படக்கூடிய நேரம் வரை (இரவில்) விமானியற்ற விமானங்களை செயற்படுத்தக்கூடாது

(அ) போதியளவு வெளிச்சத்துடன் மேற்கொள்ளும் உள்ளகச் செயற்பாடுகள் ;

(ஆ) போதியளவு வெளிச்சம் கொண்டதாக மேற்கொள்ளும் மூடப்பட்ட செயற்பாடுகள் ;

*18.* **விமானப் போட்டிகள்**

*சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயக்கத்திடமிருந்து பெற்றுக் கொண்ட விசேட அங்கீகாரமின்றி விமானி அல்லாத விமானங்களைச் செலுத்தும் போட்டி அல்லது வேறு எம்முறையிலும் போட்டி அல்லது செயற்பாடுகள் மேற்கொள்ளக்கூடாது.*

*19.* **மாற்றியமைத்தல்**

*சிவில் விமான சேவைப் பணிப்பளர் நாயகத்தின் அங்கீகரிக்கப்பட்ட நபர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினால் ஏற்கனவே அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள ஆளில்லா விமானத்தை மாற்றியமைப்பதற்குத் தேவையான அனுமதியின்றி அவ்வாறு மாற்றியமைக்கக் கூடாது*

*20.* **வானொலிக் கோபுரங்கள்**

*ஆளில்லா விமானம் வானொலி தொடர்பு சாதனம், விமானப் பயணத்தின் போது அல்லது தேடலின் போது அல்லது விமான முகாமைத்துவத் தொகுதிக்கு பாதிப்புக்கள் ஏற்படக்கூடியவாறான வகையில் செயற்பாடுகள் மேற்கொள்ளக்கூடாது.*

*6- 242*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*